| புதிய தலைமுறை | கல்வி |
|---|---|
| Sunday, 30 June 2013 | |

# கண் மருத்துவத்துறையில் பட்டம் மற்றும் டிப்ளமோ படிப்புகள்

சென்னையில் உள்ள சங்கர நேத்ராலயாவின் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒரு அங்கமான தி சங்கர நேத்ராலயா அகாடெமி கண் மருத்துவத்துறையில் பல்வேறு டிப்ளமோ, டிகிரி மற்றும் பட்டமேற்படிப்புகளை வழங்குகிறது.

## பி.எஸ்சி மெடிக்கல் லேப் டெக்னாலஜி: (B. Sc MEDICAL LAB TECHNOLOGY)

இது நமது தி தமிழ் நாடு எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் வழங்கும் மூன்று வருட பட்ட படிப்பாகும். ப்ளஸ் 2 வில் கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் படித்தவர்கள் மதிப்பெண், நுழைவுத்தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வு அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இந்த படிப்பினை படித்தவர்கள் மருத்துவமனைகளில் மெடிக்கல் லேப் டெக்னீஷியன்களாகவும், மருந்து கம்பெனிகளில் மெடிக்கல் லேப் டெக்னீஷியன்களாகவும் பணியாற்றுகிறார்கள். மேலும் பிஎஸ்.சி முடித்தவர்கள் எம்எஸ்.எல்.டி மற்றும் பிஎச்டி படிக்கக்கூடிய வாய்ப்பு

இருக்கிறது. அவற்றை முடித்தவர்கள் பன்னாட்டு மருந்து நிறுவனங்களில் அறிவியலறிஞர்களாகவும், வல்லுநர்களாகவும், பல்கலைக்கழகங்களில் கல்விப்பணி மற்றும் ஆராய்ச்சிகளில் சிறப்பாக சேவை செய்து வருகிறார்கள்.

## டிப்ளமோ இன் ஆப்தால்மிக் நர்சிங் அஸிஸ்டெண்ட் (DIPLOMA IN OPHTHALMIC NURSING ASSISTANT):

இது நமது தி தமிழ் நாடு எம்.ஜி.ஆர். மருத்துவப்

பல்கலைக்கழகம் வழங்கும் இரண்டு வருட பட்டய படிப்பாகும். ப்ளஸ் 2 வில் கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் படித்தவர்கள் மதிப்பெண், நுழைவுத்தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வு அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இந்த படிப்பினை படித்தவர்கள் கண் மருத்துவமனைகளில் கண் மருத்துவ உதவியாளர்களாகவும், வார்டுகளிலும் ஆபரேஷன் தியேட்டர்களிலும் கண் மருத்துவர்களுக்கு உதவியாளர்களாகவும் பணியாற்றுகிறார்கள்.

**<u>டிப்ளமோ இன் ஆபரேஷன் தியேட்டர் டெக்னாலஜி மற்றும் அனஸ்தீசியா</u>**
**<u>(DIPLOMA IN OPERATION THEATRE TECHNOLOGY AND ANESTHESIA):</u>**

இது நமது தி தமிழ் நாடு எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் வழங்கும் இரண்டு வருட பட்டய படிப்பாகும். ப்ளஸ் 2 வில் கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் படித்தவர்கள் மதிப்பெண், நுழைவுத்தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வு அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இந்த படிப்பினை படித்தவர்கள் கண் மருத்துவமனைகளில் மட்டுமல்லாது பொதுவாக அனைத்து மருத்துவமனைகளிலும் ஆபரேஷன் தியேட்டர்களில் ஆபரேஷன் தியேட்டர் உதவியாளர்களாகவும், ஆபரேஷன் தியேட்டர் டெக்னீஷியன்களாகவும், மயக்க மருந்தியல் நிபுணர்களுக்கு உதவியாளர்களாகவும் பணியாற்றுகிறார்கள்.

**<u>டிப்ளமோ இன் ரெஃப்ராக்ஷன் அண்ட் டிஸ்பென்சிங் (DIPLOMA IN REFRACTION AND DISPENSING):</u>**

ப்ளஸ் 2 வில் கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் படித்தவர்கள் மதிப்பெண், நுழைவுத்தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வு அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

இந்த படிப்பினை படித்தவர்கள் கண் மருத்துவமனைகளில் ரெஃப்ராக்ஷனிஸ்ட்களாகவும்,கண் மருத்துவமனைகளில் பல்வேறு உட்பிரிவுகளில் உதவியாளர்களாகவும் பணியாற்றுகிறார்கள்.

சங்கர நேத்ராலயாவில் இந்த படிப்பினை படிப்பவர்கள் மேலும் இரண்டு வருடங்கள் படித்து ஆப்டோமெட்ரிஸ்ட்களாக முன்னேறுவதற்க்கான வாய்ப்புகளும் இருக்கிறது. கண்ணாடிக்கடைகளில் உதவியாளர்களாகவும், கஸ்டமர்ரிலேஷன் அதிகாரிகளாகவும் பணியாற்ற வாய்ப்பு இருக்கிறது.

மேற்குறித்த அனைத்து படிப்புகளுக்கும் ப்ளஸ் 2 படித்து விட்டு எதிர்காலம் குறித்த கேள்விகளோடு இருப்பவர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாகும்.

விண்ணப்பிக்க கடைசி தேதி : ஜுலை 6, 2013

விவரங்களுக்கு : www.thesnacademy.ac.in

கல்லூரி முகவரி:

தி சங்கர நேத்ராலயா அகாடெமி,
9 வானகரம்- அம்பத்தூர் ரோடு,
அயனம்பாக்கம்,
சென்னை 600 095.
தொலைபேசி எண்கள் (0) 97104 85295 / 98406 55405